RESEARCH ARTICLE

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

Indian Journal of Tamil

DOI: 10.54392/ijot2634

# Human Values in Erode Tamilanban's *Vanakkam Valluva!*: A Study

**R. Karthikeyan [a, *], A. Ramalingam [a]**

[a] Department of Tamil, Erode Arts and Science College (Autonomous), Erode-638009, Tamil Nadu, India
*Corresponding author Email: rkarthikey@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2634
Received: 05-03-2026; Revised: 24-07-2026; Accepted: 02-08-2026; Published: 12-08-2026

Check for updates

**Abstract:** In the tradition of Tamil literature, the Thirukkural stands as a distinguished work that guides human life through the principles of virtue and ethical conduct. Transcending the boundaries of time, it has been widely accepted across cultures and provides ethical guidance for virtually every dimension of human existence. The thoughts of Thiruvalluvar transcend the boundaries of caste, religion, language, ethnicity, and nation, elevating the Thirukkural into a universal ethical text for humanity. Consequently, it occupies a distinctive position among the world's great humanistic literary works. Erode Tamilanban's Vanakkam Valluva! is a modern reinterpretation of Thiruvalluvar's humanistic ideas from the perspective of contemporary society. Rather than portraying Valluvar merely as an author of moral teachings, Tamilanban presents him as a champion of human liberation, a voice for social justice, a pioneer of egalitarian thought, and a symbol of universal humanity. Through poetic reinterpretation, Valluvar is transformed from a historical literary figure into a living thinker whose ideas engage directly with the social problems and challenges of the contemporary world. The poems in Vanakkam Valluva! foreground values such as human dignity, equality, social justice, freedom, compassion, and universal brotherhood. By placing Valluvar's ethical vision in dialogue with modern social realities, Tamilanban demonstrates the continuing relevance of the Thirukkural to contemporary human life. His poetry therefore functions as both a tribute to Valluvar and a critical re-reading of classical Tamil ethical thought. This article examines the humanistic values expressed in Erode Tamilanban's Vanakkam Valluva! and analyzes how the poet reinterprets Valluvar's ethical and social philosophy through a modern human-centred perspective. The study highlights the work's emphasis on equality, social responsibility, justice, and human dignity, demonstrating that humanism forms the central ideological foundation of Tamilanban's poetic engagement with Thiruvalluvar.

**Keywords:** Erode Tamilanban, Vanakkam Valluva, Thiruvalluvar, Tirukkural, Humanism, Modern Tamil Poetry

# ஈரோடு தமிழன்பனின் வணக்கம் வள்ளுவ! கவிதைகளில் மானுடவிழுமியங்கள்

**இரா. கார்த்திகேயன் [அ *], ஆ. இராமலிங்கம் [அ]**

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

தமிழ் இலக்கிய மரபில் மனித வாழ்வை அறத்தின் அடிப்படையில் நெறிப்படுத்திய தலைசிறந்த இலக்கியமாக *திருக்குறள்* திகழ்கிறது. கால எல்லைகளைக் கடந்தும் உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்நூல், மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்திற்கும் அறநெறியை வகுத்துக் கொடுக்கிறது. வள்ளுவரின் சிந்தனைகள் சாதி, சமயம், மொழி, இனம், நாடு ஆகிய எல்லைகளைத் தாண்டி மனிதகுலத்தின் பொதுமறையாக உயர்ந்துள்ளன. இதனாலேயே திருக்குறள் உலக மனிதநேய இலக்கியங்களின் வரிசையில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தகைய வள்ளுவரின் மானுடச் சிந்தனைகளை நவீன சமூகப் பார்வையோடு மறுவாசிப்பு செய்துள்ள படைப்பாக ஈரோடு தமிழன்பனின் வணக்கம் வள்ளுவ! அமைந்துள்ளது. இந்நூல் வள்ளுவரை வெறும் அறநூலாசிரியராக மட்டும் காணாமல், மனித விடுதலையின் போராளியாகவும், சமூக நீதியின் குரலாகவும், சமத்துவ அரசியலின் முன்னோடியாகவும், உலக மானுடத்தின் சின்னமாகவும் உருவகப்படுத்துகிறது. தமிழன்பனின் கவிதைகளில் வள்ளுவர் ஒரு வரலாற்று

மனிதராக இல்லாமல், இன்றைய சமூகத்தின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் பதிலளிக்கும் உயிருள்ள சிந்தனையாளராகத் தோன்றுகிறார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு." (குறள் 72)

இக்குறள் மனிதநேயத்தின் உச்சநிலையை எடுத்துரைக்கிறது (Parimelalhagar 2000). இதே சிந்தனையே தமிழன்பனின் *வணக்கம் வள்ளுவ!* முழுவதும் அடிநாதமாக ஒலிக்கிறது (Thamizhanban, 2022).

## வள்ளுவர் - மானுட ஆன்மிகத்தின் அடையாளம்

தமிழன்பன், வள்ளுவரை சமய எல்லைகளுக்குள் அடைக்க முடியாத உலக மனிதநேய சிந்தனையாளராகச் சித்தரிக்கிறார். "சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற" எனும் கல்லாடத்தின் வரிகளும் திருக்குறளின் இத்தகைய மாண்பை எடுத்துரைக்கிறன்றது. தமிழன்பன் வணக்கம் வள்ளுவ நூலில்,

"மானுட ஆன்மிகத்தை முன்மொழிந்த

உன்னைச் சமய ஆன்மிகம்

தழுவ முடியாமல்

தள்ளி நின்று தவித்தது."

என்று எழுதுகின்றார் (Thamizhanban, 2022). இந்த வரிகளில் "மானுட ஆன்மிகம்" என்ற சொல்லாட்சி குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஆன்மிகம் என்பது இறை வழிபாடு, சமயக் கோட்பாடு, சடங்கு போன்றவற்றோடு தொடர்புபடுத்தப்படுகிறது. ஆனால் தமிழன்பன், மனிதனை நேசிப்பதே உயர்ந்த ஆன்மிகம் என்று வள்ளுவரின் சிந்தனையை மறுவிளக்கம் செய்கிறார். வள்ளுவர் எந்த ஒரு மதத்திற்கும் சொந்தமானவர் அல்ல, மாறாக உலக மக்களின் பொதுவான அறவியலாளர் என்ற கருத்தை இவ்வரிகள் வலியுறுத்துகின்றன.

"இலக்கணம் தவறிய கடவுளர்கள்" என்ற உருவகம் மிகுந்த கவித்துவ ஆழமுடையது. மனிதனைப் புறக்கணிக்கும் மதக் கோட்பாடுகளே உண்மையில் தவறானவை; வள்ளுவரின் குறள்களே அவற்றைத் திருத்துகின்றன என்ற சமூக விமர்சனத்தை கவிஞர் வெளிப்படுத்துகிறார் (Thamizhanban, 2022).

இதனுடன் தொடர்புடைய திருக்குறள்,

"அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு." (குறள் 80)

என்பது, மனித அன்பே வாழ்வின் மையம் என்பதை உறுதிப்படுத்துகிறது (Parimelalhagar 2000).

## மானுட சமத்துவத்தின் குரலாக வள்ளுவர்

தமிழன்பனின் கவிதைகளில் வள்ளுவர் சமத்துவ அரசியலின் முன்னோடியாக உருவகப்படுத்தப்படுகிறார்.

"கருவறைகளில் சமத்துவ சாசனம் வரைந்து

உன் வார்த்தைகள் நியாய வாசம் வீசின."

"கருவறை" என்ற உருவகம் மனிதனின் பிறப்பைச் சுட்டுகிறது. பிறப்பிலேயே மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்பதை கவிஞர் வலியுறுத்துகிறார் (Thamizhanban, 2022). சமூகத்தில் பின்னர் உருவாக்கப்பட்ட சாதி, மத, வர்க்க வேறுபாடுகள் செயற்கையானவை என்பதையும் இவ்வரிகள் மறைமுகமாகக் கூறுகின்றன.

இதற்கு நேரடியாகப் பொருந்தும் திருக்குறள்:

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா"

என்பதாகும். இக்குறள் உலக மனித உரிமைச் சாசனத்திற்கும் முன்னோடியாக விளங்கும் சமத்துவச் சிந்தனையை முன்வைக்கிறது. தமிழன்பன், இதனை நவீன சமூக நீதியின் மொழியில் மறுபடியும் உயிர்ப்பிக்கிறார் (Parimelalhagar 2000).

## மக்களாட்சி மாண்பு

வள்ளுவர் மன்னர்களின் கவிஞர் அல்ல; மக்களின் கவிஞர் என்பதையே தமிழன்பன் வலியுறுத்துகிறார்.

"அரசர்களின் இதயங்களில் இருந்து

ஆணையிட்டுக் கொண்டிருந்த அதிகாரங்களை

அப்புறப்படுத்திவிட்டு மக்களை அங்கு நீ அமர வைத்தாய்."

இக்கவிதையில் "இதயம்" என்பது அதிகாரத்தின் மையமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தை அகற்றி மக்களை அமர்த்துவது ஜனநாயகத்தின் கவித்துவ வெளிப்பாடாக அமைகிறது. மனித மையச் சமூக அமைப்பே வள்ளுவரின் இலட்சியம் என்பதை தமிழன்பன் தெளிவுபடுத்துகிறார் (Thamizhanban, 2022).

இதனைத் தொடர்ந்து,

"மக்கள் தலைக்குமேல்

உன் குறட்பா

குடை பிடித்தது."

என்று கூறுவதன் மூலம் திருக்குறள் ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கும் அறக்குடையாக விளங்குவதைச் சுட்டுகிறார்.

திருக்குறளும்,

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கும் உலகு." (குறள் 544)

என்று மக்களின் நலனையே ஆட்சியின் அடிப்படையாக வலியுறுத்துகிறது (Parimelalhagar 2000).

## பசித்த மானுடமும் வள்ளவரின் அறச்சீற்றமும்

மானுடத்தின் மிக அடிப்படை உரிமையான உணவைப் பற்றிய சிந்தனை தமிழன்பனின் கவிதைகளில் வலுவாக வெளிப்படுகிறது.

"பசித்தவன் வயிற்றில்

பற்றி எரியும் நெருப்பிடம்

படைத்தவன்

முகவரியைக் கொடுத்துப்

'பாதகம் இல்லை தாக்கு' என்று

அனுப்புகிற வள்ளுவம்."

பசி என்பது வெறும் உடலியல் தேவையல்ல; அது சமூக அநீதியின் விளைவு என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. பசியால் வாடும் மனிதனின் வேதனையைப் போக்க இயலாத இறைநம்பிக்கையைவிட, மனிதனின் பசியைத் தீர்க்கும் அறமே உயர்ந்தது என்ற புரட்சிகரக் கருத்தை தமிழன்பன் வெளிப்படுத்துகிறார் (Thamizhanban, 2022). இதே கருத்து பிற்கால நூல்களில் அறத்தின் அடிநாதமாக ஒலிக்கக் காண்கிறோம். பாரதியார்,

"தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்

இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"

என்பது மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறிய புகழ்பெற்ற வரிகளாகும் (Bharathiar, 1977).

திருக்குறளில்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை." (குறள் 322)

என்று உணவைப் பகிர்ந்து உண்ணும் பண்பே உயர்ந்த அறம் என வள்ளுவர் கூறுகிறார் (Parimelalhagar 2000).

## மனித விடுதலையின் தத்துவமாக வள்ளுவம்

தமிழன்பன், வள்ளுவரின் வருகையின் நோக்கம் மனித விடுதலையே என வலியுறுத்துகிறார்.

"வள்ளுவர் வந்தது மானுடத்தை விடுதலை செய்ய!

உறவுகளால் ஆகும் அன்பைவிட

அன்பினால் ஆகும் உறவே உயர்ந்தது.

வள்ளுவர் மனிதனை மீட்டெடுக்கப் போராடினார்."

இவ்வரிகளில் அன்பு என்பது குடும்ப உறவைத் தாண்டி உலக மனித உறவாக விரிவடைகிறது. மனிதனைப் பிரிக்கும் எல்லைகளை உடைத்து, அனைவரையும் இணைக்கும் சக்தியாக அன்பு விளங்குகிறது (Thamizhanban, 2022).

திருக்குறளில்,

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்

பண்புடைமை என்னும் வழக்கு."

என்பதும் மனித உறவுகளின் அடிப்படை அன்பே என்பதை வலியுறுத்துகிறது (Parimelalhagar 2000).

## வாய்மையும் மனித மதிப்புகளும்

தமிழன்பன், வள்ளுவரின் உலகத்தை "வாய்மைப் பேரரசு" என்று குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது.

"உனது வாய்மைப் பேரரசில்

வார்த்தைகள் மானுடத்தைக் கொண்டாடுகின்றன;

எண்ணங்களைக் கொண்டாடுகின்றன."

இங்கு "வாய்மை" என்பது வெறும் உண்மையைப் பேசுதல் மட்டுமல்ல, மனிதனின் கண்ணியத்தை நிலைநாட்டும் ஒழுக்கநெறியாக விளங்குகிறது. வள்ளுவரின் சொற்கள் மனிதனை உயர்த்துகின்றன. அவை அதிகாரத்தையோ ஆதிக்கத்தையோ அல்ல, மனித மதிப்புகளையே கொண்டாடுகின்றன என்பதே கவிஞரின் கருத்தாகும் (Thamizhanban, 2022).

திருக்குறள்,

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்

தீமை இலாத சொலல்." (குறள் 291)

என்று வாய்மையை மனிதநேயத்தின் அடிப்படையாக வரையறுக்கிறது (Parimelalhagar 2000).

## முடிவுரை

ஈரோடு தமிழன்பனின் *வணக்கம் வள்ளுவ!* கவிதைகள், திருக்குறளின் மானுடச் சிந்தனைகளை நவீன சமூகச் சூழலோடு மறுவாசிப்பு செய்யும் குறிப்பிடத்தக்க படைப்பாகும். இக்கவிதைகளில் வள்ளுவர் சமயத் தலைவர் அல்ல; மனிதகுலத்தின் அறவியலாளர். அவர் சாதி, சமயம், அதிகாரம், வறுமை, பசி, சமத்துவமின்மை ஆகிய அனைத்திற்கும் எதிராக மனிதனின் கண்ணியத்தை நிலைநாட்டும் சிந்தனையாளராகப் படைக்கப்படுகிறார். இதனால் *வணக்கம் வள்ளுவ!* என்பது வள்ளுவரைப் போற்றும் கவிதைத் தொகுப்பு மட்டுமல்ல; மானுடத்தின் மீதான ஆழ்ந்த நம்பிக்கையையும் சமூக நீதியையும் அறிவிக்கும் நவீன மனிதநேயக் கவிதை நூலாகவும் திகழ்கிறது.

## References

Bharathiar, (1977) Bharathiar Kavithaikal, Vanavil Presuram, Chennai

Parimelalhagar, (2000) Thiru Kural, Kalaga Veliedu, Chennai

Thamizhanban, (2022) Vanakkam valluvaa, Poombukar Pathipagam, Chennai

## Conflict of interest

The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

R. Karthikeyan, A. Ramalingam, Human Values in Erode Tamilanban's Vanakkam Valluva!: A Study, Indian Journal of Tamil, 7(3), (2026) 22-26. https://doi.org/10.54392/ijot2634